காணப்படும் இத்தகைய ஷரத்துக்களைப் பொறுத்தவரையில், திருத்தம் தேவை என்று மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதைப் பொறுத்தவரையில், பொதுமக்களிடம் அனைத்துக் கட்சி மக்களும் எடுத்துச் சொல்லி ஒரு பொதுக் கருத்தை உருவாக்கிய பிறகு, இதுபோன்ற நடவடிக்கை எடுப்பது தான் நல்லதாக இருக்கும். தனிப்பட்ட முறையில் முயற்சிகளை மேற்கொள்வது சரியாக இருக்காது. இருந்தாலும் நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளாமல் இல்லை. இதையொட்டிய வழக்கொன்று உச்ச நீதிமன்றத் திற்குப் போயிருக்கிறது. அதில் நமக்குச் சாதகமான தீர்ப்பு வந்தால், இனி இந்தப் பிரச்சினைக்கே இடமிருக்காது.

திரு. பா. ரா. தாமஸ் : வேலை தேடித் தரும் நிலையங்களில் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொண்ட முன்னுரிமை உள்ளவர்களையேகூட சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளில் நியமிக்காமல் மற்றவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் முறை இருக்கிறது. எனவே பதிவு செய்து கொண்டவர்களையே முன்னுரிமை அடிப்படையில் நியமிக்க வேண்டும் என்ற விதியை அமுல்படுத்த அரசு முன்வருமா ? அதற்காக அரசு உரிய ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய ஆணை பிறப்பிக்கும் உரிமை அரசுக்கு இல்லை என்பதுதான் இதுவரை நான் அளித்து வந்த பதில் களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதாகும். சிறுபான்மையோரைப் பொறுத்த வரையில், அவர்கள் வேலை தேடித்தரும் நிலையங்களைக் கேட்கவே வேண்டியதில்லை. அவர்களே யாரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளலாம் என்ற நிலைதான் இருக்கிறது. அப்படி நியமிக்கப்படுபவர்களைக் கூட நல்லபடியாக நடத்த வேண்டும் என்பதுதான் நமது அரசின் விருப்பமாகும்.

தொழில் பிரிவு பாடப்புத்தகங்கள்.

*** 138 வினா.**—திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பிரிவுக்குத் தகுந்த பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் பிரிவுகளுக்கு பாடப் புத்தகங்கள் ஏற்படுத்தப் பட்டால், அதுவும் மற்ற பாடப்பிரிவுகள் போல் ஆகிவிடும் என்ற கருத்தில், வல்லுநர்கள் குழுவின் முடிவின்படி, பாடப்புத்தகங்கள் வைக்கப்படவில்லை. தொழில் பிரிவு வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் துணைக் கையேடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : இருகூறுகளாக்கப்பட்ட பாடத் திட்டம் அமுலில் இருந்தபோதுகூட இவ்வாறு பாடப்புத்தகம் பிரசுரிக்கப்படவில்லை. அது அப்போது பெருங்குறையாக இருந்தது. இப்போது தொழிற் கல்வியில் ஆசிரியர்களுக்கும் வழிகாட்டிகள் கூட பிரசுரிக்கப்படவில்லை. அந்த நிலையில் வல்லுநர்களை அழைத்துப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் பாடப் புத்தகங்களை உருவாக்கினால், அது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும் என்பதால், அரசு இதைப் பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பிரிவு பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு உதவுகிற வகையில் கைடுகள் எனப் படும் கையேடுகள் போடப்பட்டிருக்கின்றன. அது சிறப்பாக இருப்பதால், டெல்லியில் உள்ள என்.சி.ஈ.ஆர்.டி. நிறுவனமே அதை மற்ற மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கான விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறது.

தொழிற் கல்வியைப் பொறுத்து அரசு பாடப்புத்தகம் போடவில்லை என்ற குறையைப் பொறுத்தவரையில், ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அரசு வேண்டுமென்றேதான் போடவில்லை. தொழிற் கல்வியையும் அரசு பாடப்புத்தகமாகப் போட்டு மாணவர்கள் அதைப் பாடபுத்தகமாகக் கற்கும் முறை இருக்கக்கூடாது என்றும், உண்மையிலேயே செய்து அனுபவம் பெறு கிற கல்வியாகத்தான் தொழிற் கல்வி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் பாடப்புத்தகம் போடவில்லை. பாடப்புத்தகம் போட்டால், நிச்சய மாக இந்தக் குறைபாடு இருக்கும்.

(பிற்பகல் 4-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொழில் பிரிவு வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் கையேடுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். அது சிறப்பாக இருக்கிறது. தொழிற் கல்வியில் படிக்கின்ற மாணவர்கள் புத்தகங்கள் இல் லாமல் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்பதால், பெற்றோர்களிடையே அதிருப்தி

1981 மார்ச் 21]

ஏற்படுகிறது. அந்த அதிருப்தியின் அடிப்படையிலே அவர்களுக்கு அவ நம்பிக்கை வருகிறது. மேல் நிலைக் கல்வி தொழிற் பிரிவில் கிட்டத்தட்ட முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகவே அடுத்த ஆண்டிலாவது புத்தகங்களை வழங்க பரிசிலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: எங்களைப் போன்றவர்களுடைய கருத்தின் அடிப்படையிலே எடுக்கப்பட்ட முடிவல்ல இது. தொழிற் கல்விக் கென்று வல்லுநர்களை, ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம். அதற்கென்று அமைக்கப்பட்ட அந்தக் குழுவில் இருக்கின்றவர்கள் கூறிய அபிப்பிராயத் தைச் செயல்படுத்தியிருக்கிறோம். அரசில் இருக்கின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய ஆசியில் எடுக்கப்பட்ட முடிவல்ல இது. பெற்றோர் களுடைய கருத்தையெல்லாம் ஏற்றுக்கொள்வது என்று ஆரம்பித்து நட வடிக்கை எடுத்தால், கல்வித் துறையில் என்னென்ன நடைபெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பெற்றோர்கள் சொல்லை நாம் கேட்கவில்லை, நம் இஷ்டப்படியும் நடக்கவில்லை. வல்லுநர்கள் சொல்லுவதை ஏற்று செயல்படுத்தியிருக்கிறோம்.

கோடை விடுமுறைகால ஊதியம்.

***139 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு எட்டு மாதங்கள் தொடர்ந்து பணிபுரிந்தால்தான் கோடை விடுமுறைகால ஊதியம் வழங்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஆறு மாதம் தொடர்ந்த பணிக்கால அடிப்படையில், அந்த ஊதியம் வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) தனியார் பள்ளி ஆசிரியர்கள் எட்டு மாதம் தொடர்ந்து பணி புரிந்தால்தான் கோடை விடுமுறை கால ஊதியம் 1979-80 வரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1980-81 பள்ளியாண்டு முதல் ஆறுமாதம் தொடர்ந்து பணிபுரிந்தால், தனியார் பள்ளி களில் தற்காலிக ஆசிரியருக்கும் கோடை விடுமுறைகால ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்தப் புதிய ஆணையின்படி அந்த ஊதியத்தை வழங்காத பள்ளி ஏதேனும் உண்டா? அப்படி இருந்தால், அதுபற்றி எடுத்த நடவடிக்கை என்ன?